DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No.398/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | அலிபுகான் | Age | : | 61 |
| F/N | : | சுலைமான் | Occupation | : | விவசாயம் |
| Village | : | சாத்தான்குளம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of December 2023.

**19.12.2023**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் சாத்தான்குளத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரிகளை சரியாக அடையாளம் காட்டுகிறார்**). கடந்த வருடம் மார்ச் மாதம் சாத்தான்குளத்தில் உள்ள எனது இடத்தை சேக் தாவூது மகன் அப்துல் சமது என்பவருக்கு கிரையம் எழுதி கொடுத்திருந்தேன். கடந்த 09.02.2023 ம் தேதி மேற்படி இடத்தில் இருந்த மின் கம்பத்தை எடுக்க அப்துல் சமது என்பவரின் மனைவி குருசிதா பானு என்பவர் என்னை மேற்படி இடத்திற்கு அழைத்தார். அதன் பேரில் நான் மாலை 03.30 மணியளவில் அந்த இடத்திற்கு சென்றேன். அப்போது ஆஜர் எதிரிகளான அப்பாஸ் மந்திரி, செய்யது லியாக்கத் அலி மற்றும் குத்புதீன் ஆகிய மூவரும் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். அதில் ஆஜர் 1வது எதிரி அப்பாஸ் மந்திரி புண்டை மகனே ஏண்டா இங்க வந்த என்ற அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அதன் பின்னர் குத்புதீன் என்னை பின்னால் வந்து பிடித்து கொண்டார்.

2. அப்பாஸ் மந்திரி என்னை இரும்பு கம்பியை கொண்டு இடது தோள்பட்டையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். ஆஜர் எதிரி செய்யது லியாக்கத்அலி கட்டையை கொண்டு எனது வலது கால் முட்டியில் அடித்து காயப்படுத்தினார். எனது மனைவியான ருக்கையா பானு ஆஜர் எதிரிகளை விலக்கியபோது ஆஜர் 1வது எதிரி கம்பியை காட்டி இந்தமுறை நீ தப்பித்துவிட்டாய் அடுத்தவாட்டி கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டினார். அதன் பின்பு என்னை எனது மனைவியும், குர்சிதா பானுவும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ( **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நானும், ஆஜர் எதிரிகளும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே சொத்துப்பிரச்சனை சம்மந்தமாக

மனஸ்தாபம் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆஜர் 1வது எதிரி என் அம்மா மீதும், அப்துல் சம்மது மீதும் இராமநாதபுரம் உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.177/2021ன் கீழ் உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் ஆஜராகி வருகிறோம் என்றால் சரிதான். அந்த உரிமையியல் வழக்கு சம்மந்தமாக எங்கள் ஊரில் பஞ்சாயத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் தீர்வு கிடைக்காததால் எதிரிகள் மீது மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரிதான். அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு நான் மின்கம்பத்தை அகற்ற சென்றேன் என்றால் சரிதான்.

2. ஆஜர் எதிரிகள் மின்கம்பத்தை அகற்ற கூடாது என்று சம்பவ தினத்தன்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகே உள்ள சாலை கற்களால் போடப்பட்ட சாலை என்றால் சரிதான். ஆனால் சம்பவ சமயத்தில் அது சேதம் அடைந்திருந்தது. சம்பவம் நடந்த உடனே எனது மனைவி சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். குர்சிதா பானுவும் சம்பவ இடத்திற்கு உடனே வந்துவிட்டார். குர்சிதா பானுவிற்கும், எனது மனைவிக்கும் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். எனது சட்டையிலும், வேஷ்டியிலும் இரத்தக்கரை ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து கேணிக்கரை காவல் நிலையத்தை தாண்டி தான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். நான் மருத்துவனைக்கு செல்லும்போது கேணிக்கரை காவல் நிலையத்திற்கு சென்று புகார் மனு அளிக்கவில்லை என்றால் சரிதான். வலி அதிகமாக இருந்ததால் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றேன். சம்பவ தினத்தன்று இரவு கேணிக்கரை காவல் நிலைய போலீசார் என்னிடம் புகாரை பெற்றார்கள். புகாரை நான் எழுதவில்லை.

3. நான் சொல்ல சொல்ல பக்கத்தில் இருந்தவர் எழுதினார். அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். புகாரை எழுதியது யார் என்று எனக்கு தெரியவில்லை. புகாரில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அதன் பின்னர் நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. போலீசார் அதன் பிறகு விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எங்கள் குடும்பம் மீது தொடுத்த உரிமையியல் வழக்கை சரி செய்வதற்காக இந்த வழக்கை பொய்யாக ஆஜர் எதிரிகள் மீது தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கீழே கற்கள் மீது விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எனது மனைவியும், குர்சிதா பானுவும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும், அவர்களை இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகள் என்னை கெட்ட வார்த்தையால் திட்டவில்லை என்றாலும், கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

4. ஆஜர் எதிரிகள் சம்பவ தினத்தன்று சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. உடனடியாக காவல் நிலையம் சென்று புகார் அளித்தால் உண்மை நிலை தெரிய வரும் என்பதால் நான் உடனடியாக புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் வாக்குமூலத்தில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஏற்பட்ட காயத்தை வைத்து இந்த வழக்கை ஆஜர் எதிரிகள் மீது நான் தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மின் கம்பத்தை அகற்றுவதற்கு மின்சார ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி அவர்களுக்கு தெரியாது. அவர்கள் சாப்பிட சென்றிருந்தார்கள். நான் வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தேன். போலீசார் விசாரணையின்போது பத்திரன் நகலை அவர்களிடம்

ஒப்படைத்தேன் என்றால் சரிதான். மின்சார ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு வந்ததை பற்றி போலீசார் விசாரணையில் நான் சொன்னேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**C.C.No.398/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | ரூக்கையா பானு | Age | : | 62 |
| W/o | : | அலிபுகான் | Occupation | : | விவசாயம் |
| Village | : | சாத்தான்குளம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of December 2023.

**19.12.2023**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் சாத்தான்குளத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரிகளை சரியாக அடையாளம் காட்டுகிறார்**). கடந்த 09.02.2023ம் தேதி மாலை 03.30 மணியளவில் குர்சிதா பானு என்பவர் எனது கணவரான அ.சா.1ஐ சாத்தான்குளத்திற்கு மின்கம்பத்தை அகற்றுவதற்காக அழைத்தார். எனது கணவர் இருசக்கர வாகனத்தில் அந்த இடத்திற்கு சென்றார். அப்போது ஆஜர் எதிரி குத்புதீன் எனது கணவரை பிடித்து கொள்ள ஆஜர் எதிரி அப்பாஸ் மந்திரி இரும்பு கம்பியால் எனது கணவரின் வலது தோள்பட்டையில் அடித்து காயப்படுத்தினார். ஆஜர் எதிரி செய்யது லியாக்கத்அலி கட்டையால் எனது கணவரின் வலது கால் முட்டியில் அடித்து இரத்தக்காயப்படுத்தினார். ஆஜர் எதிரிகள் எனது கணவரை ஏண்டா நிலத்தை எங்களுக்கு பிடிக்காத நபருக்கு கொடுத்தாய் என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். நானும், குர்சிதா பானுவும் சண்டையை விலக்கியபோது எங்களையும் ஆஜர் எதிரிகள் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். அதன் பின்னர் ஆஜர் 1வது எதிரி அப்பாஸ் மந்திரி எனது கணவரை பார்த்து இந்தமுறை தப்பித்துவிட்டாய் அடுத்த முறை உன்னை கொல்லாமல்விடமாட்டேன் என்று கம்பியை காட்டி கொலைமிரட்டல் விடுத்தார். நானும், குர்சிதா பானுவும் ஆட்டோவில் எனது கணவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவர் மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்தார். பின்னர் வலி அதிகமாக இருந்ததால் தனியார் மருத்துவமனையில் எனது கணவருக்கு சிகிச்சை பார்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** அ.சா.1 எனது கணவர் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் உரிமையியல் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் மலேசியாவில் இருந்தேன். அ.சா.1க்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே மனஸ்தாபம் இருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு

கண் பார்வை சற்று தெரியாது என்றால் எனக்கு கண்பார்வை நன்கு தெரியும். காதும் நன்கு கேட்கும். சம்பவம் நடந்த உடனே நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். நான் செல்வதற்கு முன்பு சம்பவம் முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. நான் போன பிறகு தான் சம்பவம் நடந்தது. சம்பவ இடத்திற்கு நான் நடந்து சென்றேன். சண்டையை விலக்கும்போது எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் கம்பி மற்றும் கட்டையை வைத்திருந்ததால் அவர்கள் பக்கத்தில் எங்களால் செல்ல முடியவில்லை.

2. நாங்கள் ஆட்டோவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். காவல் நிலையம் செல்லவில்லை நேரடியாக மருத்துவமனைக்கு தான் சென்றோம். புகார் வாக்குமூலத்தை போலீசார் எழுதினார்கள். யார் எழுதியது என்று சரியாக ஞாபகம் இல்லை. புகார் வாக்குமூலத்தை போலீசார் படித்து காண்பித்தார்கள். நான் காவல் நிலையத்திற்கு செல்லாமல் மருத்துவமனைக்கு சென்று பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் மீது கொடுத்த உரிமையியல் வழக்கை சரி செய்வதற்காக இந்த வழக்கை பொய்யாக ஆஜர் எதிரிகள் மீது தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் கெட்ட வார்த்தைகள் பேசவில்லை என்றாலும், கொலைமிரட்டல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. குற்றவியல் வழக்கை தாக்கல் செய்தால் உரிமையியல் வழக்கு சரியாகிவிடும் என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது கணவருக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.398/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | குர்சிதா பானு | Age | : | 54 |
| W/o | : | அப்துல் சம்மது | Occupation | : | இல்லதரசி |
| Village | : | சாத்தான்குளம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of December 2023.

**19.12.2023**
**(எதிரிகள் ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் சாத்தான்குளத்தில் குடியிருந்து கொண்டு இல்லதரசியாக வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். (**சாட்சி ஆஜர் எதிரிகளை சரியாக அடையாளம் காட்டுகிறார்**). கடந்த 02.09.2023ம் தேதி மாலை 03.30 மணியளவில் அ.சா.1 னிடம் இருந்து வாங்கிய நிலத்தில் இருந்த மின்கம்பத்தை அகற்றுவதற்காக அ.சா.1 ஐ நான் ஆஜர் 1வது எதிரியின் வீட்டிற்கு அருகே உள்ள இடத்திற்கு அழைத்து சென்றேன். அப்போது ஆஜர் 1வது எதிரி அ.சா.1 ஐ கம்பியை வைத்து இடது பக்க தோள்பட்டையில் அடித்தார். ஆஜர் 2வது எதிரி கட்டையை வைத்து அ.சா.1ன் வலது காலில் அடித்தார். அதன் பின்னர் ஆஜர் 1வது எதிரி அ.சா.1 ஐ கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டினார். அதன் பின்னர் நானும், அ.சா.2ம் அ.சா.1 ஐ இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகளுக்கும், அ.சா.1ன் குடும்பத்திற்கும் நிலம் சம்மந்தமாக இடப்பிரச்சனை இருக்கிறது என்றாலும், உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றாலும் சரிதான். நான் அ.சா.1 னிடம் இருந்து வாங்கிய நிலத்திற்கு ஆவணங்கள் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த மின்கம்பத்தை அகற்றுவதற்காக அன்றைய தினம் நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். மின்சார வாரியத்திற்கு மனு கொடுத்திருந்தோமா என்றால் கொடுத்திருந்தோம். அவர்களும் அன்றைய தேதியில் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள். நான்கு மின்சார வாரியத்தின் ஊழியர்கள் வந்திருந்தார்கள். பிரச்சனை ஏற்பட்ட ஆரம்பத்திலேயே அவர்கள் அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள். நான் சம்பவ இடத்திற்கு அன்றைய தினம் நடந்து சென்றேன். சம்பவம் நடக்கும்போதே நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

2. சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்லும்போது கேணிக்கரை காவல் நிலையத்திற்கு நாங்கள் செல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனு

கொடுக்கவில்லை. அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தை பற்றி எனக்கு தெரியும். புகார் வாக்குமூலத்தை ஒரு போலீசார் எழுதினார். நான் புகார் வாக்குமூலத்தை படித்து பார்க்கவில்லை. அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

3. போலீசாரின் விசாரணையின்போது அவர்களிடம் பத்திரத்தின் நகலை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் மின் ஊழியர்கள் வந்ததை பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும், அ.சா.1 க்கும் இடையே உள்ள நிலப்பிரச்சனையை தீர்ப்பதற்காக இந்த வழக்கை அ.சா.1 தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அ.சா.1 க்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஏற்பட்ட காயத்தை வைத்து இந்த வழக்கை ஆஜர் எதிரிகள் மீது தொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u> இல்லை**

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.398/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | அசரப் அலி | Age | : | 68 |
| F/N | : | இப்ராஹிம் ஷா | Occupation | : | எலெக்ட்ரிசீயன் |
| Village | : | சாத்தான்குளம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 19th day of December 2023.

**19.12.2023**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் சாத்தான்குளத்தில் குடியிருந்து கொண்டு எலெக்ட்ரிசீயனாக வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 10.02.2023 ம் தேதி காலை 11.30 மணிக்கு நானும், சாகுல் ஹமீது என்பவரும் பிஸ்மில்லா தெருவில் உள்ள எங்கள் வீட்டருகே பேசிக் கொண்டிருந்தபோது கேணிக்கரை காவல் நிலைய போலீசார் அங்கு வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், சாகுல் ஹமீது என்பவரும் கையெழுத்து செய்தோம். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 ன் வீடு எனது வீட்டிற்கு எதிரே உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் ஒரே ஒரு கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். நான் கையெழுத்திட்ட ஆவணத்தை படித்து பார்க்கவில்லை. போலீசார் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை. நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது.

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**